"இரண்டாம் ஆண்டு."

Regd. No. M 6207

கிராமோதயம்

ஆசிரியர் : ப. கோவிந்தசாமி

(அகில பாரத சர்க்கா சங்கத்தின் மாதமிருமுறை பத்திரிகை)

மலர் 2 | திருப்பூர் - நவம்பர் 1 * 1953 * விலை 1 அணா | இதழ் 1

"எண்ணை ஆலைகளும், நாட்டு செக்குகளும்"

[சென்ற செப்டம்பர் 15-ம் தேதியிட்ட எமது "கிராமோதயம்" இதழ் 22ல் நாட்டு செக்குகளை பாதுகாப்பது சம்பந்தமாக அகில இந்திய கதர் கிராமக் கைத்தொழில் போர்டு மத்திய சர்க்காருக்கு சமர்ப்பித்துள்ள சிபார்சுகளும், கிராமங்களில் சீர்திருத்தப்பட்ட செக்குகளை புகுத்தி அத்தொழிலை வளர்ப்பதற்கான திட்டத்தையும் பிரசுரித்திருந்தோம். அவைகளுக்கெதிராக சென்னை எண்ணை ஆலை வியாபாரிகள் சங்கத்தினர் மத்திய சர்க்காருக்கு சமர்ப்பித்துள்ள வேண்டுகோளும், சென்னை அரசாங்கத்தின் நிதி மந்திரி ஸ்ரீ சுப்பிரமணியம் அவர்கள் பதிலையும் கீழே தருகிறோம். பிரச்னையை தெளிவுபடுத்த இவை உதவும்.

இன்று கதர், கைத்தறிகளுக்கு பாதுகாப்பளிக்கும் விஷயத்தில் பஞ்சாலைகள் காட்டும் மனோநிலைக்கொத்தவாறுதான் இதுவும் இருக்கிறது. நாட்டு செக்குகளை விழுங்குவது ஆலைகளின் பிறப்புரிமையாக கொண்டாடுகிறதையே இது வெளிப்படுத்துகிறது.

சுதேசி ஆலை முதலாளிகளுடைய கொள்கையும், சுதேசியமும், எவ்வாறு முரண்பட்டிருக்கிறது என்றும் இதன் விளைவாக தேசத்தொழில் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் ஏற்படும் விளைவுகளையும் இவை நன்கு விளக்குகின்றன. ஆசிரியர்]

ஆக்ஷேபணைகள்

"அகில இந்திய கதர், கிராமக் கைத்தொழில் போர்டு மத்திய அரசாங்கத்திற்கு சமர்ப்பித்துள்ள சிபார்சுகளை அமுல் நடத்தினால் எண்ணை ஆட்டும் ஆலைத் தொழிலுக்கும் எண்ணை வாங்கும் மக்களுக்கும் பெரும் தீங்கிழைக்கும்.

"ஒன்று அல்லது இரண்டு எக்ஸ்பெல்லர்களைக் கொண்டு ஓடிவரும் சிறு எண்ணை ஆட்டும் ஆலைகள் தங்கள் உற்பத்தி சக்தியை சீரமைக்கும் பொருட்டு மேலும் ஒன்றிரண்டு இயந்திரங்களை சேர்க்க விரும்பக்கூடும். மேல்கொண்டு ஆலைகள் விஸ்தரிக்கக்கூடாதென தடை விதிக்கப்படுமேயானால் இவை மிகவும் பாதிக்கப்படும்

"இந்த ஆலைகளின் வேலை சூழ்நிலையையும், எண்ணை வித்துக்களின் உற்பத்தி நிலவரத்தையும், பொறுத்து வருடத்திற்கு வருடம் மாறுதலடைந்து வருவது இயற்கை. ஆகையால் இவைகளில் அதிகபக்ஷம் ஆட்டவேண்டிய எண்ணை வித்துக்கள் 'இவ்வளவு' என்று தற்சமயம் நடைபெறும் வேலைகளையோ, சென்ற சில ஆண்டுகளில் நடந்த வேலைகளையோ, அனுசரித்து நிர்ணயிப்பது சாத்தியமில்லை. அப்படியிருந்தும் ஒரு அதிகபக்ஷ உற்பத்தி வரம்பை ஏற்படுத்தினாலும் அதை திறமையோடு அமுல் நடத்துவதும் கஷ்டம். எண்ணை வித்துக்கள் உற்பத்தியாகும் பிரதேசத்தில் அமைந்துள்ள ஆலைகள் எளிதில் தமது கோட்டாவை மீறி அதிக எண்ணை ஆட்டுவது சாத்தியமாவதோடு, இதை அதிகாரிகள் கண்டுபிடிப்பதும் சாத்தியமாகாது. நியாயத்திற்கும், சட்டத்திற்கும் உட்பட்டு நடக்கும் சில ஆலைகள் தான் இதனால் பாதிக்கப்படும்.

வனஸ்பதி

"வனஸ்பதி உற்பத்தி சாலைகளில் கட்டாயமாகக் கலக்கப்பட வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டுள்ள (5%) ஐந்து சதவிகிதம் நல்லெண்ணை உற்பத்தி செய்வதற்கே நாட்டு செக்குகளால் சாத்தியமாகாது!!

செக்குகளின் குறைகள்!

"செக்கில் எண்ணை ஆட்டுவது குறையற்றதென்று சொல்வதும் சாத்தியமில்லை. விசை ஆலைகளில் கிடைக்கும் எண்ணையைக் காட்டிலும் நாட்டு செக்குகளில் மூன்று அல்லது நான்கு சதவிகிதம் குறைவாகத்தான் கிடைக்கிறது. மில் எண்ணை போல் தெளிவான எண்ணையும் செக்கிலிருந்து கிடைப்பதில்லை. செக்கெண்ணை வடிகட்டி சுத்தம் செய்யப்படாததால் அது சீக்கிரம் காறலெடுப்பதும் சகஜம். சென்ற காலத்திய அனுபவத்திலும் மட்ட ரகமான எண்ணைகளை உயர்ந்த ரக எண்ணைகளுடன் கலப்பதும் நாட்டு செக்குகளிலேயே அதிக மென்றும் பார்த்துள்ளோம்.

கட்டுப்பாடற்ற அராஜகம் தேவை!!

"எண்ணை ஆலைகளையும், நாட்டு செக்குகளையும் தத்தம் சக்திக்கேற்ற அளவு எவ்வித நிபந்தனையுமின்றி வேலை செய்துவர விட்டுவிடவேண்டும். அவசியமானால் சுலப வட்டிக் கடன்கொடுத்தும், விற்பனைக்கு வழி வகுத்தும் சர்க்கார் தனது பொது நிதிகளிலிருந்து நாட்டு செக்குகளுக்கு உதவுவதில் எவ்வித ஆக்ஷேபணையுமிராது. ஆனால் இதற்காக ஆலைகள் மீது விசேஷ வரி விதிக்கலாகாது."

சென்னை 10-8-53 } "சென்னை எண்ணை, எண்ணை வித்துக்கள் சங்கம்" The Madras Oil & Seeds Association

ஆலைகளைக் கட்டுப்படுத்தவேண்டும்!

"எண்ணை ("எக்ஸ்பெல்லர்") ஆலைகள் விஷயத்தில் எனது கருத்துகள் உங்களுக்கு (எண்ணை, எண்ணெ் வித்துகள் சங்கத்திற்கு) திருப்தியளிக்காது. மின்சாரம் அல்லது வேறு சக்திகளைக் கொண்டு இயங்கும் இயந்திரங்களை, நமது தேசத்தின் வேலையில்லாதோர் திண்டாட்டத்தையும், ஜனத்தொகை பிரச்னையையும் முன்னிட்டு சாத்தியமான வரை குறைத்துக்கொள்ள வேண்டும் என்பதே எனது கருத்து.

திட்டக்கமிஷன் திட்டத்தில் குறை!

"உண்மையில் தேசீய ஐந்தாண்டு அபிவிருத்தி திட்டத்தை உருவாக்கியவர்கள் மக்களுக்கு அதிக

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

கிராமோதயம்

நவம்பர் 1 1953

இரண்டாம் ஆண்டு!

"கிராமோதயம்" பிறந்து ஓராண்டு பூர்த்தியாகி இரண்டாமாண்டில் அடி எடுத்து வைக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம். இந்த ஓராண்டு காலமாக கிராமோதயத்திற்கு பொது மக்கள் அளித்துவரும் ஆதரவிற்கு எங்கள் நன்றி.

இத் தருணத்தில் எமது முதலாண்டு அனுபவத்தை எண்ணிப் பார்ப்பது பொருத்தமாகும். 1952ம் ஆண்டு கதர்த் தொழிலுக்கும், கிராமக் கைத்தொழில்களுக்கும் பெருத்த சோதனை நிறைந்ததாயிருந்தது. தமிழ் நாட்டில் சுமார் 4000 கிராமங்களில் சிதறிக்கிடக்கும் 80,000 கைராட்டை நூற்போர் கடும் பஞ்சத்துக் குட்பட்டனர். அவர்கள் நூற்கும் நூலை வாங்கி கதராக்கி விற்பனை செய்ய முடியாத நிலையிருந்தது இவ்வாறு பல இன்னல்களால் ஏங்கித்தவிக்கும் ஏழை கிராம மக்களுக்கு உய்வளிக்க பெரு இயந்திரத் தொழில்களை கட்டுப்படுத்தி சிறு கைத்தொழில்களுக்கு பாதுகாப்பளிக்க வேண்டும் என்று காந்தியடிகளின் நிர்மாண ஸ்தாபனங்கள் கோரிவந்தன. ஆனால் சிதறுண்டு கிடக்கும் கிராம மக்களின் குரல் சர்க்காருக்கும், அதிகாரிகளுக்கும் எட்டச் செய்வது எளியதன்று.

ஏழை யெளியவர் – படும் இன்னலை யெண்ணினால்
என்மனம் வேகுதே
கோழைக் கடையர்களாய் – கல்வி கொஞ்சமும் இன்றி
தடிக்கக் கஞ்சியின்றி,
சூழுந் துயரிடையே – அவர் தூண்டிற் புழுப்போலத்
துன்பந் துடிக்கின்றார்,
கேள்வி முறையில்லையோ–இவர் கேடுற் றழுங் கண்ணீர்
நாடெல்லாம் பாயுதே.

— **கவியோகி சுத்தானந்த பாரதி**

இந்த தீனர்களின் குரலை ஒலிக்கச் செய்வதே "கிராமோதய"த்தின் குறிக்கோள். கிராமத் தொழில்கள் வளர்ந்து அதன் மூலம் மககள் உவகையுடன் வாழ வகை செய்வதையே தனது பணியாகக் கொண்டு தோன்றியது "கிராமோதயம்."

கிராம மக்கள் ஆங்காங்கு ஒன்றுகூடி தங்கள் தங்கள் கிராமங்களுக்கு புது வாழ்வளிக்கும் கருத்தில் 150 சங்கங்கள் அமைத்துக்கொண்டு உற்சாகமாக வேலை செய்துவருகின்றனர்.

ரோமாபுரி ஒருநாளில் கட்டி முடியவில்லை. அதேபோல் 35 கோடி தேவர்கள் வாழும் பாரத தேசம் சென்ற பல்லாண்டுகளாக அடிமையாகக் கிடந்து விடுதலை பெற்று பின் ஒரு சில நாளில் தனது சகல இன்னல்களையும் போக்க முடியவில்லை. ஆனால் முயற்சி இருக்கிறது. காலம் மாறும். மேன்மை அடையும். இதற்கறிகுறியாகவே இந்த சங்கங்கள் தோன்றி செயலாற்றி வருகின்றன.

இந்த சங்கங்களுக்கு ஒரு உயர்ந்த லட்சியமிருக்கிறது.

"எல்லா உலகமும் இனியதொரு வீடாகி
எல்லாரும் ஆன்மிவுற வேந்தியே – நல்லாராய்க்
கல்வி, தொழிலுரிமை, கணமுறை யோக சித்திச்
செல்வராய் வாழ்க செழித்து"

இந்த லட்சியத்திற்காக "கிராமோதய"மும் செயல் புரிந்து வருகிறது. முயற்சியிலிருக்கும் குறைகளை நாம் நன்கு உணருகிறோம். அவை தீர நேயர்களின் அன்பும், உதவியும், ஆலோசனையும் பொங்கியெழ வேண்டும். ஏழை குரல் எட்டுத் திக்கிலும் எட்ட வேண்டும்.

நாம் விரும்புவது

1. கடையனுக்கும் கடைத்தேற்றம்.
2. சாம்ய யோகம் – (பொருள், சுகம், யாவையின் நியாயமான பங்கிடு) சமமான பங்கிடல்ல.
3. சுரண்டலற்ற ஒரு அஹிம்சா சமுதாய நிர்மாணம்.
4. குவிந்த அதிகார ஆதிக்க மறைவு.
5. வாழ்க்கைக்கு உயர்வு தரும் கல்வி.
6. உழைத்துண்டு வாழ்வதற்கு எல்லோருக்கும் உரிமையும் வழி வகைகளுக்கு உத்திரவாதமும்!

"கிராமோதய"த்தை எவ்வளவு மலிவாக வெளியிட முடியுமோ, அவ்வளவு மலிவாக வெளியிடவேண்டுமென்பது நமது அவா. ஆனால் ஒரு உயர்ந்த லட்சியத்திற்காக வேலை செய்யும் போது அதற்கு மாறான வழியில் செல்வது முறையற்றதல்லவா? எனவே மில் காகிதத்தை உபயோகிப்பதோ, அல்லது ஏதாவது விளம்பரங்கள் போடுவதோ சாத்தியமில்லை. சென்ற ஆண்டில் அளித்ததைக் காட்டிலும் நேயர்கள் ஆதரவு பெருகி "கிராமோதயம்" தன் பணியை இடைவிடாது ஆற்றிவர இறைவன் அருள்புரிவாராக!

ப. கோவிந்தசாமி,
அ. சுப்பராயலு,
ப. நம்மாள்வார்,
ரா. மருதைநாயகம்,
ஸி. டி. வி. ராகவலு.

திருநெல்வேலி விபாக்கில் (பஞ்சு) கைமணை அரவை — சில விபரங்கள்

சென்ற 1951ம் வருடம் முதல் கோவில்பட்டிக்கடுத்த காலாங்கரைப்பட்டி, சங்கரலிங்கபுரம், கெச்சலாபுரம், நமசிவாயபுரம், சண்முகபுரம், கூத்தலூரணி, கந்தசாமியாபுரம், முத்துசாமியாபுரம், தேவர்குளம், ஆகிய கிராமங்களில் பருத்தி வாங்கி அதை கொட்டை நீக்கும் வேலையை கிராம மக்களே செய்து வருகின்றனர். அது சம்பந்தமான சில புள்ளிவிபரங்களை கீழே தருகிறோம்.

வருடங்கள்	1951	1952	1953
பஞ்சரைக்க வேலை செய்தவர்கள் எண்	72	89	85
இதில் ஹரிஜனங்கள் எண்	21	1	32
	ரூ.	ரூ.	ரூ.
கொடுத்த அரவைக் கூலி	953	1,722	1,088
	ராத்தல்	ராத்தல்	ராத்தல்
அரைத்த பருத்தி	40,423	66,657	54,118
கிடைத்த பஞ்சு	11,124	18,742	15,225
,, பருத்திக் கொட்டை	27,611	44,748	35,877
,, காச்சல் கழிவு	1,256	1,633	2,770
,, செவ்வாளை பருத்தி	291	1,303	109
,, [illegible]ப்பு பஞ்சு	141	231	138

— ப. நம்மாள்வார்

ஆரோக்கியத்தை சீர்குலைக்கும் — அலுமினியம் !!

அலுமினிய நாகரீகம்

தற்பொழுது அலுமினியத்தில் செய்யப்பட்டுள்ள பாத்திரங்கள் தேசத்தின் மூலை முடுக்குகளில் கூட காணலாம்.

முதன் முதலில் அலுமினியத்தால் 1892-ம் ஆண்டில் தான் பாத்திரங்கள் செய்யப்பட்டன. சமையல் வேலைக்கும், உணவு உட்கொள்ளவும் இந்த உலோகத்தை உபயோகிப்பதால் மக்கள் ஆரோக்கியமும், சுகவாழ்வும் எப்படி கெடுகிறது என்று அந்நாட்களில் யாருக்கும் தெரியாது. ஆனால் சென்ற நாற்பது ஆண்டுகளில் அலுமினியம் பெரிய ஒரு வியாபாரமாக பரிணமித்து, பெருத்த பிரசார சக்தியை ஈடுபடுத்தி உலகெங்கும் பரவிவருகிறது.

ஆரோக்கியத்திற்கு ஆபத்து

சென்ற 1913 ஆண்டு வெளியிடப்பட்ட லான்ஸெட் ரிப்போர்டுக்கு பிறகு உணவு தயாரிக்கவும், உண்ணவும் அலுமினியப் பாத்திரங்கள் உபயோகிப்பதால் தேக நலம் குன்றி, (கான்ஸர்) புற்று நோய் போன்ற பல வியாதிகளுக்கு காரணமாகவும் இருக்கிறது என்பதற்கு உலகெங்கும் பல மறுக்கமுடியாத சாக்ஷியங்கள் கிடைத்திருக்கிறது.

அமிலமும்; க்ஷாரமும்

நமது உணவில் "அமிலம்" (Acid) "க்ஷாரம்" (Alkali) ஆகிய இருவகைப் பொருட்களும் கலந்திருக்கின்றன. இவைகள் பழங்களிலும், காய்கனிகளிலும் கலந்திருக்கின்றன. குளுமையில் கூட சில காடி சத்துக்கள் அலுமினியத்தை கரைத்து விடுகின்றன. சூடாக்கினால் அதிவேகமாக கரைந்து விடும்.

அலுமினியத்தை தின்றுவிடும்

உணவுத் தொழில்களில் அலுமினியமும், அலுமினியம் கலந்த உலோகங்களும் (1948) (Aluminium and Aluminium alloys in the Food Industry 1948 by J. M. Bryan) என்ற நூலில் கீழ்கண்ட எச்சரிக்கைகள் தரப்பட்டுள்ளன:

1 க்ஷார சத்துக்கள் (Alkalies) அலுமினியத்தை அதிவேகமாக கரைத்துவிடும். இதனால் திட்டமான கேடு விளையும்.

2 தக்காளியை சூடாக்கி தயாரிக்கும் உணவு வகைகள் அலுமினியத்தில் தயாரிக்கக்கூடாது.

3 திராக்ஷை ரசமும் சிறிதளவு உப்புமாக கொதிக்கவைத்தால் அலுமினியத்தை அதிவேகமாக தின்று விடுகிறது.

அலுமினிய வியாதிகள்

இது சம்பந்தமாக ஆங்கில ராணுவ டாக்டரான டாக்டர் வி ஹன்டு கூப்பர் பல கட்டுரைகளை எழுதியிருக்கிறார். தானே அலுமினிய பாஷாணத்தால் பீடிக்கப்பட்டிருந்ததால் இதில் அவருக்கு மிக சிரத்தை ஏற்பட்டது. அவருடைய ஆராய்ச்சியின் பயனாக அலுமினியம் தொடர்ந்து உட்கொள்வதினால் வயிற்றிலும், உடல்களிலும உள்ள ம்யூக்கோஸை (Mucose) உறுத்தி கொப்புளிக்க செய்து, ரணமாக்குவதோடல்லாமல் நரம்புகளையும் தாக்கக்கூடும் என்று கூறுகிறார்.

— கிருஷ்ணமூர்த்தி மீரா

(தொடரும்)

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி)

வேலை தேடிக் கொடுக்கும் விஷயத்தில் அது தவறி விட்டதென்பதை உணருகிறார்கள், பொதுவாக நமது தேசத்தில் சுமார் நூற்றுக்கு எண்பது பேர்கள் வரை வேலை இல்லாதோர்!! வேலை இருப்போரிலும் பெரும்பாலோர்களுக்கு வருடம் முழுவதற்கும் வேலை இல்லை! ஆகையால் தேச நலனைப் பார்க்கும்பொழுது உற்பத்தி பெருக்கத்தோடு, வேலை தேடிக் கொடுக்கும் பிரச்னையும் கலந்திருக்கிறது. நம் நாட்டிலேயே கிடைக்கக் கூடிய மனித சக்தியை பயன்படுத்தி, உற்பத்தியை பெருக்க முடியுமானால், இயந்திரங்களைக்காட்டிலும், அம்முறையே சிறந்தது. மனித சக்தி கிடைக்கும்பொழுதே இயந்திரங்களை உபயோகப்படுத்துவதின்மூலம் வேலையில்லாத் திண்டாட்டம்தான் நாளுக்கு நாள் அதிகரித்துவரும்.

திட்டமில்லா திண்டாட்டம்

"எந்தெந்த துறைகளில் இயந்திரங்களை உபயோகப்படுத்தலாம், எவைகளில் மனித சக்தியையே உபயோகிப்படுத்த வேண்டும் என்று நமக்கு ஒரு திட்டம் இல்லை என்பது வருந்தத்தக்கதே. வெறும் ஆலைப் பெருக்கம் காரணமாக உற்பத்தி மட்டும் பெருகக்கூடுமாயினும், வேலையில்லா திண்டாட்டம் போன்ற பலவித கஷ்டங்கள் அதிகரித்து பலாத்காரம், சட்ட விரோதமான இயக்கங்கள் போன்றவை தோன்றி அரசாங்கமே தத்தளிக்கும் நிலை தோன்றக்கூடும்!

"சிறிதாகிலும் வேலை சாத்தியமான பேர்களுக்கெல்லாம் கொடுத்தாலொழிய திருப்தியான ஒரு அரசாங்கம் நடைபெற முடியாது.

இயந்திர ஒழிப்பு போராட்டம்

"நமது தேசம் அடைந்துள்ள வளர்ச்சியின் நிலையில் மனித சக்தியைத்தான் நாம் பரவலாக பயன்படுத்த வேண்டும், இதற்காகவே ஸ்ரீ ராஜாஜி கைத்தறிகளுக்காக போராடி வருகிறார்.

"இயந்திர சாதனங்கள் வாங்க வெளிநாடுகளுக்கு பணம் அனுப்பவேண்டியுள்ளது. மனித சக்தியை ஈடுபடுத்துவது சற்று அதிக செலவுடையதாக தோன்றியபொழுதிலும் தேசத்திலிருந்து அந்த செல்வம் வெளியேறுவதில்லை.

மனித சக்தியை பயன்படுத்த

"இந்த விதி எண்ணை ஆலைகளுக்கும் பொருந்தும். இந்த எண்ணை ஆலைகள் நாட்டு செக்குகளை சிறுக சிறுக அழித்துவிட்டன. செக்குகள் பழங்காலத்தவை என்று குறை கூறலாம். ஆனால் அதை சீர்திருத்துவது சாத்தியம். ஏன் மனித சக்தியை வீணாக்கி இயந்திர சக்தியை உபயோகப்படுத்த வேண்டும் என்று எனக்கு விளங்கவில்லை!!

செல்வம் வெளிநாட்டுக்கு போகிறது!

"சென்ற மகா யுத்தத்திற்கு பின் எண்ணை ஆலைகளுக்காக சுமார் ரூ 8 கோடி மூலதனம் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறது. இதில் சுமார் ரூ. 6 கோடியாகிலும் இயந்திர சாதனங்களுக்காக வெளிநாடுகளுக்கு சென்றிருக்கும்!!"

சென்னை
30—9—1953 } — ஸ்ரீ சி. சுப்பிரமணியம்,
சென்னை அரசாங்க நிதி மந்திரி

(சென்னை எண்ணை, எண்ணை வித்துகள் சங்கத்தில் நிகழ்த்திய ஒரு சொற்பொழிவிலிருந்து)

"கிராமோதய கதர் சங்க வேலைகள்"

திருநெல்வேலி விபாக்

[சென்ற இதழில் நெல்லை ஜில்லா கிராமோதய கதர் சங்க வேலைகள் சம்பந்தமான சில புள்ளிவிபரங்கள் தரப்பட்டன. இந்த இதழில் மேலும் சில விபரங்கள் தரப்படுகிறது. இவை மொத்தம் நெல்லை வட்டாரத்திலுள்ள சுமார் 60 கிராமோதய கதர் சங்கங்களில் 40 சங்கங்களின் அறிக்கைகளைக் கொண்டு தயாரித்தவையே ஆகும். — ஆசிரியர்]

1. ஆகஸ்டு 1953 ஷ மொத்தம் எல்லா சங்கங்களிலும் உற்பத்தியான நூல்
சிட்டம் 53,252
கிரயம் ரூ. 12,701

2. நூலுக்குப் பதில் கதர்
எடுத்துக்கொண்டது ரூ. 6,319
,, நூற்புக்கருவிகள் எடுத்துக்கொண்டது ரூ. 459
,, பஞ்சு, பட்டைப் பஞ்சு எடுத்துக்கொண்டது ரூ. 3,351

மொத்தம் ரூ. 10,129

3. நூலுக்காக சர்க்கா சங்கத்திலிருந்து பெற்றுக்கொண்ட ரொக்கம் ரூ. 3,259
4. ரொக்கம் கொடுத்து பட்டைப் பஞ்சு, பஞ்சு, கதர் முதலியவை வாங்கியது ரூ. 687
5. நிகர் ரொக்கம் பெற்றுக்கொண்டது ரூ. 2,572
6. நூற்போருக்காக தானியம் சேகரித்து விற்பனை செய்தது 426 பக்கா படி ரூ. 313

1953 ஆகஸ்டு முடிய கிராமோதய கதர் சங்கங்கள் நூற்போருக்கு விநியோகம் செய்த உணவு தானியங்கள்:-

	அளவு			கிரயம்
1. கஸ்தூரிரங்கபுரம்	176	பக்காபடி	ரூ.	134
2. வரகனூர்	120	,,	ரூ.	85
3. நடுவப்பட்டி	164	,,	ரூ,	116
	460	,,	ரூ.	335

— **ப. நம்மாள்வார்**

திருநெல்வேலி விபாக் கிராமோதய சங்கங்களில் நெசவுத் தொழில்

திருநெல்வேலி விபாக்கின் மூலம் தற்சமயம் 60 கிராமோதய சங்கங்கள் அமைக்கப்பட்டு கதர் வேலை செய்யப்பட்டு வருகிறது.

அநேக கிராமங்களில் நூற்புத் தொழில் புத்துயிர் பெற்று பெருவாரியாக நூற்க ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. நூலின் மூலம் பண்டமாற்றுதலாகக் கிடைக்கக்கூடிய கதர் ஜவுளியை அந்தந்தக் கிராமத்திலேயே விநியோகிக்கப்படுவதின் மூலம் துணித் தேவைப் பூர்த்தி செய்வதோடு தங்களுக்கு வேண்டிய உணவு தானியங்களுக்கும் கதர் சிட்டங்களை கொடுத்து மாற்றிக்கொள்கிறார்கள்.

இதன் மூலம் அந்தந்த கிராமம் ஆடைக்கும் உணவிற்கும் சுயதேவைப் பூர்த்திக் கிராமமாக ஆகக்கூடிய வழி உண்டாகிறது! தற்சமயம் சில கிராமங்களிலேயே இந்த சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தக் கிராமங்களை மாதிரியாகக்கொண்டு மற்ற கிராமங்களும் முயற்சி செய்யலாம்.

தற்சமயம் கிராமங்களில் மக்கள் ஆடைக்காக சர்க்கா சங்கத்தில் நூலைக் கொடுத்து கதர் பெற்றுக் கொண்டு வருகிறார்கள். ஆனால் தங்கள் கிராமத்தில் உற்பத்தியாகும் சிட்டங்களை அந்தந்தக் கிராமத்திலேயே நெய்துகொள்ள வேண்டுமென்ற எண்ணமேலீட்டால் தற்சமயம் நெய்வதற்கு சௌகரியப்பட்ட கிராமங்களில் தறிகள் அமைத்துக்கொள்ளவும் மேற்கொண்டிருக்கிறார்கள்.

இப்பொழுது நடுவப்பட்டி, கஸ்தூரிரங்கபுர கிராமங்களில் இரண்டு இரண்டு தறிகள் போடப்பட்டு நெசவாகிக் கொண்டு வருகின்றன. இதனால் குவியலாக ஒரே இடத்தில் கூடிய நெசவிற்கு நூலில்லாமல் கஷ்டப்படும் தறிகாரர்களுக்கு பரவலாக கிராமத்தில் பல பிரிவாகப் பிரிந்து அந்தந்த கிராமத்தில் நூற்கும் நூலை நெய்து கொடுப்பதோடு அல்லாமல் நிரந்தரமாக எப்பொழுதும் தொழில் நடத்த ஒரு வழியும் உண்டாகிவருகிறது.

— **ப. நம்மாள்வார்**

கோழிக்கோடு விபாக்

மலபார் ஜில்லாவில் கோழிக்கோடு விபாகத்தில் 1953 செப்டம்பர் முடிய 11 கிராமோதய கதர் சங்கங்கள் அமைக்கப்பட்டு வேலை செய்து வருகின்றன. அவைகளிலிருந்து கிடைத்துள்ள அறிக்கைகளின் சுருக்கமே கீழே தரப்படுகிறது.

சங்கங்களின் பெயர்	பதிவு செய்த நூற்போர்கள் எண்	நூல் உற்பத்தி சிட்டம்	கதர் விற்பனை ரூ.
1. கண்ணன்சேரி	52	2,508	117
2. நெடுங்கோட்டூர்	55	1,128	178
3. சேவாயூர்	84	1,697	154
4. வியயூர்	40	1,669	83
5. எடக்குளம்	15	512	34
6, கொயிலாண்டி	13	573	—
7. ராமநாட்டுக்கரை	41	618	31
	300	8,705	597

மற்றும் வள்ளிக்குன்னு, அரியல்லூர், தேஞ்ஞிப்பாலம், சிறக்கல் முதலிய கிராமோதய சங்கங்கள் அக்டோபர் மாதத்தில்தான் வேலை செய்ய ஆரம்பித்துள்ளன.

கோழிக்கோடு
21—10—1953 } — **பி. கே. குஞ்ஞிராமன் நம்பியார்**

(இந்தப் பத்திரிகை கையினுல் செய்த காகிதத்தில் அச்சிடப்படுகிறது.)

இந்த இதழில்

எண்ணை மில்களும்—நாட்டு செக்குகளும்
— ஸ்ரீ சி. சுப்ரமணியம் 1
இரண்டாம் ஆண்டு — ப. கோவிந்தசாமி 2
ஆரோக்கியத்தை குலைக்கும் அலுமினியம் — கிருஷ்ணமூர்த்தி மிர் மிரா 3
கிராமோதய கதர் சங்க வேலைகள்
— ப. நம்மாள்வார் 4
திருநெல்வேலி விபாக் கிராமோதய சங்கங்களில் நெசவு தொழில்—ப. நம்மாள்வார் 4

"கிராமோதயம்" சந்தாவிபரம்:- தனிப்பிரதி 0-1-0 வருட சந்தா ரூ. 1-8-0 அகில பாரத சர்க்கா சங்கக் கிளைகளில் கிடைக்கும்.
Edited and Published by B. Govindaswami for All India Spinners' Association, (Tamilnad Branch) Tirupur. Printed by S. Subramaniam at the Kamala Printing Press, Tirupur.

CONNEMARA PUBLIC LIBRARY